DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.** 30/2020

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முருகன் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர்கள் சொல்லிக்கொடுத்ததன்

அடிப்படையில் நான் உறுதிக்கூற்றை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றது. நான் விபத்து சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை, 2 நிமிடங்களில் அந்த இடத்திற்கு வந்து விபத்து நடந்த இடத்தையும், விபத்து சம்பந்தப்பட்ட வாகனங்களையும் பார்த்தேன். மற்ற பொதுமக்கள் வந்த பின்னர் தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மழை பெய்ததா என்றால் லேசான சாரல்தான் இருந்தது. விபத்து நடந்த சாலை பேவர் பிளாக் போடப்பட்ட சாலை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபர் பீடி சுற்றும் தொழில் செய்துவந்தார் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபருக்கு எந்தெந்த பகுதிகளில் காயம்ஏற்பட்டது என்றால் கை, தலை, கழுத்து ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான். அதனால்தான் நான் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அந்த வாகனம் வேகமாக வந்ததாக என்னிடம் சொன்னார்கள். விபத்தை நான் நேரில் பார்க்காததால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi